பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

17 01 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி உலகளாவிய வாகன தொழில்துறை கண்காட்சியைப் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

2. மத்திய அரசு அளித்த நிதியுதவித் திட்டங்களின் மூலமாக புத்தொழில் இந்தியா இயக்கம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3. தமிழ் மொழியில் உள்ள சிறந்த படைப்புகளை உலக அளவில் கொண்டு செல்ல மாநில அரசு ஊக்கமளித்து வருவதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

4. மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆரின் 108-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. உலக கோப்பை கோகோ போட்டியில் இந்திய ஆடவர் அணி பூடானையும், மகளிர் அணி மலேசியாவையும் வென்றன.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி உலகளாவிய வாகன தொழில்துறை கண்காட்சியைப் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

பாரத் மண்டபத்தில் காலை மணி 10.30க்கு இக்கண்காட்சியை அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

ஆறு நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில் பல்வேறு வாகன தொழில்துறை நிறுவனங்களின் அரங்குகளும் இடம்பெறுகின்றன.

இதில் 20க்கும் மேற்பட்ட கருத்தரங்குகளும் நடைபெற உள்ளன.

எதிர்கால வாகன தொழில்நுட்பங்கள், மின்சார வாகன தொழில்நுட்ப வளர்ச்சி உள்ளிட்டவை குறித்து இந்தக் கருத்தரங்குகளில் விரிவான விவாதங்கள் நடைபெறும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

எதிர்கால திறன்களுக்கான உலக தரவரிசைப் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடம் பெற்றுள்ளது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கனடா, ஜெர்மனி ஆகிய நாடுகளை பின்னுக்குத் தள்ளி இந்தியா இரண்டாவது இடம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளாக, நாட்டின் இளையோர்களை வலுப்படுத்தி, அவர்கள் தன்னம்பிக்கை பெறவும், அவர்களது திறன்களை மேம்படுத்தவும் அரசு பணியாற்றி வருவதாக அவர் கூறியுள்ளார்.

செல்வ வளத்தை உருவாக்குதல், இளையோருக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றை நோக்கிய பயணத்தில் நாடு முன்னேறிச் செல்லும் நிலையில், இந்த மதிப்பீடுகள் முக்கியமானவையாக அமைந்துள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசு அளித்த நிதியுதவித் திட்டங்களின் மூலமாக புத்தொழில் இந்தியா இயக்கம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புத்தொழில் இந்தியா இயக்கத்தின் 9ஆம் ஆண்டு விழாவையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இத்துறையில் காணப்படும் சவால்களை எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க அரசு ஆதரவு அளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் இதுவரை ஒரு லட்சத்து 59 ஆயிரம் புத்தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இத்துறையில் உலக அளவில் இந்தியா 3வது இடம் வகிக்கிறது என்றும் அவர் கூறினார்.

இந்த நிறுவனங்கள் மூலம் இதுவரை 17 லட்சத்து 20 ஆயிரம் நேரடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்கும் ஸ்டார்டப் மகா கும்பமேளா என்ற நிகழ்வு ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளதாவும், இதில் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கும் என்றும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

<<<<>>>>

தேசிய அகண்ட அலைவரிசை திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை சென்னையில் மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா காணொலி காட்சி மூலம் இன்று தொடங்கி வைக்கிறார்.

தொலைதொடர்பு சேவைகளை எளிதாக்குவதற்கும், இணையதள மோசடிகளைத் தடுப்பதற்குமான **Sanchar Sathi** கைப்பேசி செயலியையும் அமைச்சர் தொடங்கி வைக்க உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழ் மொழியில் உள்ள சிறந்த படைப்புகளை உலக அளவில் கொண்டு செல்ல மாநில அரசு ஊக்கமளித்து வருவதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழாவை சென்னையில் நேற்று தொடங்கி வைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

இத்தொகுதியில் இதுவரை 9 பேர் மனுதாக்கல் செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மறைந்த முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா எம்ஜிஆரின் 108-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி தமிழகம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் கிண்டியில் உள்ள எம்.ஜி.ஆரின் திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் மரியாதை செலுத்த உள்ளனர்.

அஇஅதிமுக சார்பில் மாநிலம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

<<<<>>>>

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் நேற்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியின்போது மாவட்ட ஆட்சியர் அவமதிக்கப்பட்டுள்ளதாகவும், இது கண்டிக்கத்தக்கது என்றும் பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அமைச்சர்கள் மேடையில் இருந்தபோது, பெண் அதிகாரி அவமதிக்கப்பட்டுள்ளதாகவும், இது மன்னராட்சி மன நிலைபோல் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்தகள்</u>*

துருக்கியின் இஸ்தான்புல்லில் கள்ளச்சாராயம் அருந்தியதில் 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 50-க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

ஸ்வாமித்வா திட்டத்தின் கீழ் 65 லட்சம் சொத்து அட்டைகளை பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் நாளை வழங்குகிறார்.

<<<<>>>>

ஜவஹர் நவோதயா பள்ளிகளுக்கு இடையேயான 25-வது இளையோர் நாடாளுமன்றப் போட்டியில் வெற்றி பெற்ற பள்ளிகளுக்குப் புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் பரிசுகளை வழங்கினார்.

<<<<>>>>

ஜார்க்கண்ட் மாநிலம் மேற்கு சிங்க்பம் மாவட்டத்தில் மத்திய அரசு சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல். முருகன் நேற்று ஆய்வு செய்தார்.

<<<<>>>>

இ-ஷ்ரம் இணையதளத்தில் அமைப்பு சாரா தொழிலாளர்களின் பதிவை அதிகரிப்பது குறித்த ஆய்வுக் கூட்டம் மத்திய தொழிலாளர் நலத்துறைச் செயலாளர் திருமதி ஸ்மிதா தாவ்ரா தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது.

<<<<>>>>

மத்திய சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் பிரதமரின் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து அத்துறையின் செயலாளர் திரு சந்திர சேகர் குமார் தலைமையில் புதுதில்லியில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

மத்திய நிர்வாக சீர்திருத்தங்கள் துறைச் செயலாளர் திரு ஸ்ரீனிவாஸ் தலைமையில் புதுதில்லியில் நடைபெற்ற சேவை வழங்கல் ஆணையர்கள் கூட்டத்தில் பல்வேறு மாநிலங்களின் பொது சேவை வழங்கல் துறை ஆணையர்கள் பங்கேற்றனர்.

<<<<>>>>

அடல் நிலத்தடி நீர் திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பாக தேசிய அளவிலான வழிகாட்டும் குழுவின் ஏழாவது கூட்டம் புதுதில்லியில் மத்திய ஜல்சக்தித் துறைச் செயலாளர் திரு தேபஸ்ரீ முகர்ஜி தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்த 6 பேரின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார்.

<<<<>>>>

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தூய்மைப் பணித் திட்டத்தின் கீழ் கடந்த வாரத்தில் 5 ஆயிரத்து 323 டன் கட்டடக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக கோப்பை கோகோ போட்டியில் இந்திய ஆடவர் அணி பூடானையும், மகளிர் அணி மலேசியாவையும் வென்றன.

தில்லியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஆடவர் அணி 71-34 என்ற புள்ளிக் கணக்கில் பூடானை வீழ்த்தியது.

மகளிர் அணி 100-20 என்ற புள்ளிக் கணக்கில் மலேசியாவை வென்றது.

இன்று நடைபெறும் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியா - பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

தில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Riya Bhatia – Vaidehi Chaudhri** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**